செய்தி வெளியீடு எண். 76 /2018 நாள் :12.02.2018

**வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டு வட்டம், மேல்பட்டி உள்வட்டம், பொகளூர் மற்றும் பரவக்கல் கிராமத்தில் மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில் 20.02.2018 அன்று சிறப்பு மனுநீதிநாள் முகாம் நடைபெறுகிறது.**

வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டு வட்டம், மேல்பட்டி உள்வட்டம், பொகளூர் மற்றும் பரவக்கல் கிராமத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் தலைமையில் 20.02.2018 அன்று சிறப்பு மனுநீதி நாள் முகாம் காலை 10.00 மணியளவில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆகவே இப்பகுதி கிராமத்தை சுற்றியுள்ள பொது மக்கள் தங்களுக்கு தேவைப்படும் சாதிசான்று, வருமானச்சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், நிலம் மற்றும் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, ஆதரவற்றோர் உதவித் தொகை, பிறப்பு மற்றும இறப்பு சான்றிதழ், குடும்ப அட்டை போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண மாவட்ட வருவாய் அலுவலரிடம் நேரடியாக மனுக்களாக வழங்கிட இந்த சிறப்பு மனுநீதி நாள் முகாமினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9. 12/2/18.